# யா / வேலணை மத்திய கல்லூரி

(நவோதயா பாடசாலை)

# J/ Velanai Central College

*( Navodhaya School )*

Phone: / Fax: 021- 4590836

e.mail:-velanai-central@yahoo.com
Web Site : www.velanaicentralcollege.com

**PRINCIPAL**
***Mr P. ARUNAGIRINATHAN***
***B.A (Hons), Dip. in Ed, M. Ed, SLPS I***

***Velanai West,***
***Velanai***

23.07.2007

**கனடா வாழ் வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவருக்கும் வணக்கங்கள்**

பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியிலும் எமது கல்லூரி தனது பணியை வெற்றிகரமாக செய்து வருகிறது. சோதனைகளுக்குள்ளும் பல சாதனைகளையும் நாம் செய்து வருகிறோம். 2006. G.C.E.O/L பரீட்சையில் 60பேர் பரீட்சைக்கு தோற்றி 56பேர் G.C.E.A/L. வகுப்பில் கற்கிறார்கள். 2006/2007 ம் கல்வியாண்டில் 07 மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றுள்ளார்கள். கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் பல்வேறு சாதனைகளை நாம் செய்து வருகிறோம்.

எமது கல்லூரிக்கு பல தேவைகள் உள்ளன. அரசு எமக்கு எல்லாவற்றையும் செய்வதில்லை. . பழைய மாணவர்களின் உழைப்பினிலேயேதான் கல்லூரி தனது தேவைகளை நிறைவேற்றி வருகிறது. கடந்த 02 வருடமாக மதிய உணவுப்பணியினை லண்டன் பழைய மாணவர் சங்கம் செய்து வருகிறது. 2007ல் 1ம் தவணையில் பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் உதவியது. 2ம் தவணை மீளவும் லண்டன் பழைய மாணவர் சங்கம் உதவியது. 3வது தவணையில் மதிய உணவுப்பணியை நிதியின்மையினால் நிறுத்த வேண்டியுள்ளது. இந்நிலையில் உங்களிடம் உதவிகோரி நிற்கிறோம். மதிய உணவு இன்றைய சூழலில் அத்தியாவசிய தேவையாக உள்ளது.கருணை கூர்ந்து உதவுங்கள்

<u>மேலும் பல தேவைகள் உள்ளன.</u>

1. 60 வருடங்களுக்கு முந்திய மலசலகூடங்கள் புனரமைப்பு செய்யப்பட வேண்டியுள்ளது.
2. நூலகத்திற்குரிய தளபாடங்கள், நூல்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளது.
3. விளையாட்டுத்துறைக்குரிய பல்வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளது.
4. உள்ளக தொடர்பாடல் சாதனங்களைப் பொருத்த வேண்டியுள்ளது.
5. மாணவர்களுக்கு கற்றல், உபகரணங்கள், சப்பாத்து பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

இவற்றை மனதில் எடுத்து கல்லூரித்தாய்க்கு உங்களால் ஏதாவது வழிகளில் உதவ முடியுமாயின் தயவு செய்து உதவுங்கள். பல வழிகளிலும் நம்பிக்கை இழந்து நிற்கும் எமது பிரதேச மக்களின், மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு உதவ வேண்டுமென உரிமையுடனும் உறவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்,
கல்விப்பணியில்,
P. Arunagirinathan

**P.Arunagirinathan**
**Principal**
**J/VELANAI CENTRAL COLLEGE**